# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

Special Issue September - 2018



## தமிழ் இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்

வட்டார மக்களின் சமூக அதிகாரமாக்கல் அறக்கட்டளை

SOCIAL EMPOWERMENT OF LOCAL PEOPLE TRUST

www.selptrust.org

ISSN 2320-3412

# தமிழ் இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்


| வ.எண் | பெயர் மற்றும் கட்டுரைத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | **அமுதா. க**<br>பரதவர் வாழ்வியலில் பெண்களின் பங்களிப்பு | 1 |
| 2 | **அருணா தேவி. ப**<br>பத்துப்பாட்டில் பண்டமாற்று பரிவர்த்தனை | 4 |
| 3 | **அரேபியா**<br>பட்டினப்பாலை மக்களின் செல்வநிலையும் வணிகமுறையும் | 7 |
| 4 | **அர்ச்சனா. செ**<br>புறநானூற்றில் பரிசிலரும் பொருளியலும் | 9 |
| 5 | **அனிதா. மு**<br>புறநானூற்றில் அரசர் புலவர் உறவுநிலையில் 'பொருளியல்' தன்மை | 11 |
| 6 | **அனிதா. தி**<br>பதிற்றுப்பத்து உணர்த்தும் வளமான வாழ்வு | 14 |
| 7 | **அன்புராணி. செ**<br>திரையிசைப் பாடல்களில் பொருளாதாரச் சிந்தனைகள் | 16 |
| 8 | **ஆரோக்கியமேரி. இரா**<br>தமிழ் இலக்கியங்கள் சுட்டும் கொடைச் சிறப்பு | 19 |
| 9 | **ஆனந்தி. ஆ**<br>மதுரைக் காஞ்சி காட்டும் வாணிபம் | 22 |
| 10 | **ஆனந்தி. க**<br>கலம்பகங்கள் உணர்த்தும் பொருளாதாரச் சிந்தனைகள் | 24 |
| 11 | **ஆனந்தி. மு**<br>பட்டினப்பாலையில் செல்வ வளம் | 27 |
| 12 | **இராமமூர்த்தி. ச**<br>ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் கவிதைகளில் பொருளியல் சிந்தனைகள் | 30 |
| 13 | **இராஜா. ஆ**<br>சிறுபாணாற்றுப்படையில் வறுமைநிலை | 33 |
| 14 | **இலலிதா சுந்தரம்**<br>பொருளியல் சிந்தனைகள் பொருளாதார நிலையும் பண்டமாற்றும் - ஓர் ஒப்பாய்வு | 35 |
| 15 | **கருப்பசாமி. க**<br>"தமிழ்க் கருவூலத்தில்" பொருளியல் சிந்தனைகள் | 38 |
| 16 | **கருப்பாயி. பு**<br>சீவகசிந்தாமணியில் தொழில் வளம் | 40 |
| 17 | **கலைமகள். ந**<br>நாலடியாரில் ஒப்புரவு | 42 |
| 18 | **கலைவாணி. ச**<br>சரி நிகர் சமானம் | 45 |
| 19 | **கற்பகச்செல்வி. மு**<br>பெருங்காற்று சிறுகதைத் தொகுப்பில் பொருளியல் சிந்தனை | 48 |
| 20 | **கார்த்திகா. மு**<br>தமிழ்க் கவிதைகளில் பொருளியல் சிந்தனைகள் | 51 |
| 21 | **கார்த்திகைச்செல்வி. பா**<br>வள்ளுவர் காட்டும் பொருளியல் நெறிகள் | 54 |
| 22 | **கிருஷ்ணமூர்த்தி. சு**<br>வள்ளுவர் சுட்டும் பொருளியல் சிந்தனைகள் | 57 |

ISSN 2320 - 3412

# திரையிசைப் பாடல்களில் பொருளாதாரச் சிந்தனைகள்

**முனைவர் செ.அன்புராணி**
*உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*
*பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை*

**முன்னுரை**

ஒரு சமூகத்தின் நிலையை அச்சமூகத்தின் பொருளாதார வளமே வெளிப்படுத்திக் காட்டுகிறது. பணத்தின் அளவுகோல்தான் மனிதர்களின் தரத்தைக் காட்டுகிறது. பணமே மனிதனின் சமூக இருப்பை நிர்ணயிக்கிறது. பிறரால் ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவர்களையும், மதிப்புமிக்கவர்களாக மாற்றிவிடும் தகுதி பொருளிற்கு உண்டு. பகைவர்களின் செருக்கை இல்லாமற்செய்யும் வலிமை பொருளிற்கு இருப்பதால் **'செய்க பொருளை'** என்று வள்ளுவர் கட்டளையிட்டுக் கூறுகிறார். **'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'** என்பதையும் வள்ளுவர் இடித்துரைக்கிறார். அத்தகைய பொருளே இக்காலத்தில் **'பணம்'** என்னும் உருப்பெற்று மனித சமுதாயத்தை வழிநடத்திச் செல்வதாக உள்ளது. பணத்தினால் சமூகத்தில் மனிதர்களுக்குக் கிடைக்கும் மதிப்பையும், இழப்பையும் திரையிசைப் பாடல்கள் பலவாறு பதிவுசெய்துள்ளன. பணத்தால் நிர்ணயிக்கப்படும் பொருளாதார நிலையினைத் திரையிசைப் பாடல்கள் எவ்வாறு பதிவுசெய்துள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**பணத்தின் சமூக முக்கியத்துவம்**

சங்க இலக்கியங்களில் **'பொருள்வயிற் பிரிவு'** என்னும் நிலையினைக் காணமுடிகிறது. தலைவன் பல்வேறு காரணங்களுக்காகத் தலைவியையும், அவனது குடும்பத்தையும் நீங்கிப் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்வதைச் சங்கப்பாடல்களில் காணமுடிகிறது. காலந்தோறும் மனிதவாழ்வில் பொருளின் தேவையும், முக்கியத்துவமும் இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது. இதனை வள்ளுவர் பல்வேறு குறள்களில் பதிவு செய்துள்ளார். பொருளின் முக்கியத்துவத்தை உணர்த்த **'பொருள் செயல் வகை'** என்னும் அதிகாரத்தையே வள்ளுவர் படைத்தளித்துள்ளார்.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை"
(குறள். 758)**

என்னும் குறளில் பொருள் வைத்திருப்பவன் ஒரு செயலைச் செய்ய முற்படுவதைக் குன்றின்மேல் நின்று யானைப்போர் காண்பதைப் போன்று பாதுகாப்பனது என்கிறார் வள்ளுவர். உலகில் ஒருவர் பாதுகாப்புடன் வாழப் பொருள் மிகமிகத் தேவை என்பதை மேற்கண்ட குறள் மூலம் உணர்த்துகிறார்.

திருவள்ளுவரின் **'பொருள்'** பற்றிய சிந்தனைகளே காலந்தோறும் புலவர்களின் கருத்துக்களாக அமைவதைக் காணமுடிகிறது. திரையிசைப் பாடல்களிலும் குறிப்பாக கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கா.மு.ஷெரீப் ஆகிய கவிஞர்களின் பாடல்களிலும் திருவள்ளுவரின் கருத்துக்களே இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

**சமூக ஏற்றத்தாழ்விற்குக் காரணமாகும் பணம்**

பொருளாதாரம்தான் ஒருநாட்டின் வளர்ச்சியை, அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளைத் தீர்மானிக்கிறது. மனித சமூகத்தின் ஏற்றத்தாழ்விற்கு மிக முக்கியமான காரணியாக அமைவது பொருளாதாரமே. பணமே மனிதர்களிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பிரிவினையை ஏற்படுத்துகிறது.

**"இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி"
(நல்வழி.2)**

என்னும் பாடலில் ஔவையார் **'பொருளைக் கொடுப்பவரை உயர்ந்தோர்'** என்கிறார். பொருள் உடையவரை உயர்ந்தவராகக் காட்டாமல் 'பொருளைப் பிறருக்குக் கொடுத்து உதவுபவரை உயர்ந்தவராகக் காட்டுகிறார் ஔவையார். பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டியதன் அவசியத்தை இதன் மூலம் வலியுறுத்துகிறார். மேலும், **'அறம் செய விரும்பு'** என அவர் கூறுவதும் இந்த அடிப்படையில்தான்.

**"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"
(குறள். 754)**

என்னும் குறளில் அறத்தின் வழியில் தீதின்றி சேர்க்கும் பொருளே ஒருவர்க்கு இன்பம் தரும் என்பதை விளக்குகிறார்.

குடும்பம், பணிபுரியும் இடம், கோவில் என அனைத்து சமூக வெளிகளிலும் ஒருவர் உயர்வாகப் போற்றப்படப் பணம்தான் காரணமாகிறது. குடும்பத்தில் பணம் ஈட்டுபவர் உயர்வாகப் போற்றப்படுகிறார்கள். பணிபுரியும் இடத்தில் பணம் உடையவருக்கே முதல் மரியாதை கொடுக்கப்படுகிறது. இறை